# பிரிக்பீல்ட்ஸில் கடுமையான வாகன நெரிசல்





**நமது நிருபர்**

கோலாலம்பூர், ஆக.27- தலைநகர், பிரிக்பீல்ட்ஸில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது என்று மணியம், சிவகுமார், சரவணன், சேகர் ஆகியோர் வருத்தம் தெரிவித்தனர். காலை, மாலை இரு வேளைகளிலும் மோசமான வாகன நெரிசல் ஏற்படுவதோடு வாகன நிறுத்துமிடமும் கிடைப்பதில்லை. இதில் ஓரமாக வாகனத்தை நிறுத்தி வைப்பவர்கள் மணிக்கணக்கில் அங்கு அப்படியே நிறுத்தி வைத்துச் சென்று விடுகிறார்கள்.

இதனால் மற்றவர்களுக்கு காரை நிறுத்தி வைக்க இடமில்லாமல் போய் விடுகிறது. சில நேரங்களில் இரட்டை பார்க்கிங் போட்டு விட்டுச் செல்வதால் மிகவும் இடையூறாக இருக்கிறது.

இதை கோலாலம்பூர் மாநகர் மன்றம் முறையாகக் கண்காணித்து 3 மணி நேரம் காரை நிறுத்த வேண்டிய ஓரிடத்தில் அதற்கும் கூடுதலான நேரத்திற்கு நிறுத்தப்பட்டிருந்தால் சம்மன் விதிக்க வேண்டும். இல்லா விட்டால் காரை அப்புறப்படுத்த வேண்டும். இந்த அணுகுமுறையைக் கையாண்டால் நிறுத்துமிடங் களில் கார்களின் எண்ணிக்கை குறைந்து மற்றவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

அப்படியே நிறுத்துமிடம் கிடைத்தாலும் கூட மிகத் தொலைவில்தான் கிடைக்கிறது. இதில் முதியோர், சிறார்கள், மாற்றுத் திறனாளிகள் எப்படி அவ்வளவு தூரத்திற்கு நடந்து வருவார்கள்? இவ்வாறு மணிக்கணக்கில் காரை நிறுத்தி வைத்து எங்கோ சென்று நீண்ட நேரம் கழித்து வருபவர்களுக்குப் பெரிய தொகையில் சம்மன் விதிக்கப்பட வேண்டும்.

இவ்வாண்டு வரும் அக்டோபர் 31ஆம் தேதி தீபாவளித் திருநாள் கொண்டாடப்படவிருப்பதால் அடுத்த மாதம் இப்பகுதியில் கார்கள் பெருகி விடும்.

இதன் அடிப்படையில் மாநகர் மன்றம் இதற்குத் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வு காண வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.